67—

சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்கும் திட்டம்.

*21776-**திருமதி வி.ஜி. மணிமேகலை :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மதுரை-தூத்துக்குடி சாலையையும், திருச்சுழி-பார்த்திபனூர் சாலையையும் தேசிய நெடுஞ்சாலை என்று அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலே இடம்பெறத்தக்க வகையிலே பொற்கால ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியிலே, அமைச்சர் அவர்கள், எழவில்லை என்று கூறிவிட்டார்கள். மதுரை-தூத்துக்குடி சாலையை அமைச்சர் அவர்கள் பலமுறை பார்த்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அந்த வழியிலே வந்திருக்கிறார்கள். அந்தச் சாலை மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. அந்தச் சாலையை தற்போது அகலப்படுத்துவதற்கு உண்டான நடவடிக்கை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அந்தச் சாலையை அகலப் படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தருவார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மதுரை-தூத்துக்குடி சாலைக்கு ரூ.4 கோடி அளவுக்குத் திட்டங்கள் துவக்கப்பட்டு, அகலப்படுத்துகிற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி, பார்த்திபனூர்-திருச்சுழி சாலையையும், மதுரை-தூத்துக்குடி சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கும்

1995 மார்ச் 20]

திட்டம் அரசிடம் உள்ளதா என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழகத்தில் இருக்கிற ஏறத்தாழ 16 சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக எடுக்க வேண்டுமென்று மத்திய அரசிடத்திலே வலியுறுத்தியிருக்கிறோம். நம்முடைய ஆட்சிக் காலத்திலேதான் 20-3-1992-லே இந்த 16 சாலைகளையும் எடுக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு 11-1-1993-ல், எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு அதிகமாக இல்லாத காரணத்தாலே இந்தச் சாலைகளை எல்லாம் எடுக்கமுடியாது என்று அவர்கள் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றவேண்டிய பொறுப்பு மத்திய அரசிடத்திலே இருக்கிறது. நாம் பல்வேறு பரிந்துரைகளை அனுப்பினாலும்கூட, அவர்கள் நிதியாதாரம் இல்லை என்று ஒதுக்கிவிடுகிறார்கள். இந்த திருச்சுழி-பார்த்திபனூர் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கமுடியாது. இது ஸ்டேட் ஹைவேஸ்-இல் இருக்கிறது. தமிழக அரசினுடைய கண்காணிப்பில் இருக்கின்ற சாலை. ஆகவே இந்தச் சாலையை எடுப்பதற்கான வாய்ப்பு இல்லை. நம்மைப் பொறுத்தமட்டிலே, மதுரை-தூத்துக்குடி சாலையை அகலப்படுத்துவதற்காக ஏற்கெனவே திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அது நீண்ட சாலை. ஒரே நேரத்தில் நிதி ஒதுக்கீடு செய்யமுடியாது. தற்போது இருக்கிற சாலையே பஸ் போக்குவரத்திற்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமலேயே இருக்கிறது. ஏற்கெனவே அகலப்படுத்துகின்ற பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்தச் சாலையை போக்குவரத்துக்கு பிரச்சினை இல்லாமல் பார்த்துக்கொண்டு அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை-தூத்துக்குடி சாலையைச் சிறப்பாகச் செய்து கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு உங்கள் வாயிலாக மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே மதுரை-தூத்துக்குடி சாலை மட்டுமல்லாது, திருச்சுழி-பார்த்திபனூர் சாலையும் மிகவும் முக்கியமான சாலையாகும். இராமநாதபுரம், இராமேஸ்வரம் போன்ற இடங்களுக்கு செல்லக்கூடிய மெயின் சாலையாகவும் மேலும்

TRUTH ALONE TRIUMPHS

தஞ்சாவூர் போன்ற இடங்களுக்கும் செல்லக் கூடிய மெயின் சாலையாகவும் அது இருக்கின்ற காரணத்தினாலும், இன்றையதினம் தூத்துக்குடியிருந்து லாரி டிரான்ஸ்போர்ட் எல்லாம் அந்த வழியாக, பார்த்திபனூர்-திருச்சுழி வழியாக செல்கின்ற காரணத்தினாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு உதவி செய்வார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி தேசிய நெடுஞ்சாலையைப் பற்றியது.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தேசிய நெடுஞ்சாலைத் துறை பற்றியதாக இருந்தாலும் அகலப்படுத்திய பிறகுதான் அதை தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு கொடுக்க நம்முடைய அரசு பரிசீலனை செய்ய முடியும் என்பதை அறிவேன். இருப்பினும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதற்கட்டமாக அதை அகலப்படுத்துவார்களா என்பதை தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரு வழிச் சாலைகளாக மாற்றப்பட்ட 16 சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்ற வேண்டுமென்று மைய அரசுக்கு நாம் கோரிக்கை வைத்து, அதில் ஒன்றுகூட எடுத்துக்கொள்ள முடியாது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஏற்கெனவே இதற்கு முன்னர் இருக்கின்ற முன்னுரிமை கொடுக்கப்பட்ட பட்டியலில் உள்ள சாலைகளை எடுத்துக்கொள்வதற்கே மைய அரசு மறுத்து வருகிறது. இருந்தாலும், தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் போக்குவரத்தின் முக்கியத்துவத்தைக் கருதி அந்த சாலைகளை எல்லாம் மைய அரசு எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். திருச்சுழி-பார்த்திபனூர் சாலையைப் பற்றி ஏற்கெனவே தெரிவித்ததை போல தமிழ்நாடு அரசின் பொறுப்பில் இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலை துறையின் பொறுப்பில் இருக்கின்ற சாலை அது. இதை அகலப்படுத்த வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை. ஏற்கெனவே ஒரு வழிச் சாலையாக இருக்கின்ற சாலையை இரு வழி சாலையாக மாற்றுவதற்கு நிதி நிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.